பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 07 2026 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவது குறித்து, மத்திய அரசுத்துறை செயலாளர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. குடியரசுத்தலைவர் பதவியேற்று 4 ஆண்டுகளை குறிக்கும் வகையிலான புத்தகங்கள், அவருடைய சேவை மனப்பான்மை, அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக உள்ளன என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. மாணவர்களிடையே போதைப் பழக்கத்தையும், வன்முறையையும் கட்டுப்படுத்த தவெக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய தடகள வீரர் குல்வீர் சிங் வெள்ளிப் பதக்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய அரசுத்துறை செயலாளர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று உயர்மட்ட ஆலோசனை நடத்தினார்.

நிதி, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை, தொழில்நுட்பத் துறைகளின் உயரதிகாரிகளும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குளை எட்டுவது தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நீடித்த வளர்ச்சியை நோக்கி செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அப்போது வலியுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டு மக்களின் நலன்களுக்கான ஆட்சி முறையை தொடரவும், உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பது குறித்தும் மத்திய அரசுத்துறை செயலாளர்களுடன் தாம் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய துறைகளில் இளம் தொழில்முனைவோரின் தீவிர பங்களிப்பை ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தியதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் 5 புத்தகங்கள் வெளியீட்டு விழாவில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தப் புத்தகங்களை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்.

இதில் பங்கேற்றது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் எல். முருகன், குடியரசுத்தலைவரின் சேவை மனப்பான்மை, மன உறுதி, அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீதான அர்ப்பணிப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தலைமைத்துவம் ஆகிய விழுமியங்களை இந்தப் புத்தகங்கள் வெளிப்படுத்துவதாக உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத்தலைவரின் ஊக்கமளிக்கக் கூடிய இந்தப் பயணத்தில், இவை அவருக்கு மரியாதை அளிப்பதுடன், எதிர்கால சந்ததியினருக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என்று டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<>>>

மாணவர்களிடையே போதைப் பழக்கத்தையும், வன்முறையையும் கட்டுப்படுத்த தவெக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் அருகே பட்டப் பகலில் கல்லூரி மாணவர்கள் மீது 15 பேர் கொண்ட போதை கும்பல் கத்தியால் தாக்குதல் நடத்திய சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களும், வியாபாரிகளும் அதிகம் கூடும் மாநகரின் மையப் பகுதியில் அரங்கேறிய இந்த தாக்குதலால் மக்கள் அலறியடித்து ஓடும் நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சம்பவம் மாநில அரசின் நிர்வாக தோல்வியை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறியுள்ள திரு. நயினார் நாகேந்திரன், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தவெக சட்டப்பேரவை உறுப்பினரிடம் குதிரை பேரத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட 2 பேருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ரமேஷ், கார்த்திக் ஆகிய இருவரும் தாக்கல் செய்த ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி இளந்திரையன், அவர்களுக்கு நிபந்தனையுடன் கூடிய ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

அவர்கள் மறு உத்தரவு வரும் வரை காலையும், மாலையும் சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் விசாரணை அதிகாரி முன் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்.

சாட்சிகளை கலைக்கக் கூடாது, விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் ஆகிய நிபந்தனை விதித்து ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் பத்ம விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்த விருதுக்கு பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பிக்க விரும்புவோர், வரும் 31ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு மாவட்ட விளையாட்டு அலுவலகம் கேட்டுக்கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடித்தபசு விழாவின் முக்கிய நிகழ்வான சங்கரநாராயணர், அம்பாளுக்கு காட்சி கொடுக்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் இதர பகுதிகளிலும், புதுச்சேரி மற்றம் காரைக்காலிலும் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் நாளை ஒருசில இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும், மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களைப் பொறுத்தவரை ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், மாநிலத்தின் பிற மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடுமு என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

*வரும் 31, ஒன்றாம் தேதிகளில் கோவை, நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழையும், மேற்கத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.*

*சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

***இருவரிச் செய்திகள்***

*ஈரான் மீதான தாக்குதல் தொடங்கிய பின்னர் முதல் முறையாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ நேற்று சந்தித்துப் பேசினார்.*

*-------------*

*உலக அளவில் கப்பல் துறை பணியாளர்களை வழங்கும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாக BIMCO-ICS ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.*

*-------------*

*நாகாலாந்தின் Khopanala-வில் கடந்த 13ஆம் தேதி நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவம் குறித்த விசாரணையை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.*

*-------------*

*ஜார்கண்ட் மாநிலம் தன்பாத் - Giridih எல்லைப் பகுதியில் மாவோயிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர் Misir Besra-வை பாதுகாப்புப் படையினர் நேற்று கைது செய்தனர்.*

*-------------*

*நாமக்கல் மாவட்டம் வெப்படை அருகே போதை மாத்திரைகளை விற்பனை செய்ததாக சிறுவர்கள் உட்பட 9 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

-------------

*தூத்துக்குடியில் முறைகேடாக குடிநீர் இணைப்பு வைத்திருப்பவர்கள் உடனடியாக இணைப்புக்கான கட்டணம் செலுத்தி முறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாநகராட்சி தெரிவித்துள்ளது.*

-------------

*தஞ்சை மாவட்டம் கும்பகோணம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா பெயர் மாற்றத்திற்காக லஞ்சம் பெற்ற புகாரின்பேரில் இரண்டு ஊழியர்களை லஞ்ச ஒழிப்புக் காவல்துறையினர் கைது செய்தனர்.*

-------------

*ராணிப்பேட்டை மாவட்டம் துரைப்பெரும்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி பிரியா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

-------------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் தடகள வீரர் குல்வீர் சிங், 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.*

*கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர், நேற்று பந்தய தூரத்தை 27 நிமிடங்கள் 49 வினாடிகளில் கடந்து, இரண்டாவது இடத்தைப் பிடித்து, இந்தப் பிரிவில் முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.*

*ஆஸ்திரேலியாவின் Ky Robinson தங்கப் பதக்கமும், இங்கிலாந்தின் David Mullarkey வெண்கலப் பதக்கமும் வென்றனர்.*

*மகளிர் 69 கிலோ எடைப்பிரிவு பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் Harjinder Kaur வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.*

*மேலும் குத்துச்சண்டைப் போட்டிகளில் மகளிர் பிரிவில் இந்தியாவின் ப்ரீத்தி பவார், ப்ரியா கங்காஸ், ஆடவர் பிரிவில் ஜடுமானி சிங் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறி பதக்க வாய்ப்பை உறுதி செய்துள்ளனர்.*

*<<<<>>>>*